[13th August 1960

SRI P. G. MANICKAM: தேயிலை, காப்பித் தோட்டங்களில் உள்ள பங்களாக்களில் மின்சார லைட்டுகள் கொடுக்கப்படுகின்றன. முதலாளிகளிடம் சொல்லி தொழிலாளர்களுக்கும் அவர்களுடைய இல்லங்களிலே மின்சார லைட்டு போட மீண்டும் பரிசிலனை செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN: உத்தரவு போடவில்லை என்று தான் சொன்னேன். முதலாளிகளிடம் சொல்லி வசதிகள் செய்துகொடுப்பதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது.

SRI J. MATHA GOWDER: தேயிலைத் தோட்டங்களில் அனுமதிக்கப்படுகிற மின்சார யந்திரங்களுக்கு இவ்வளவு யூனிட், வீடுகளுக்கு இவ்வளவு என்று மின்சார இலாக்கா சொல்லுவதால் அவ்வளவையும் தொழிலாளர்களுக்குக் கொடுக்க முடியாமல் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அப்படியானால் மின்சார இலாகா அமைச்சர் தொழிலாளர் வீடுகளுக்கும் உபயோகப்படுத்த அனுமதிப்பாரா என்று கேட்க விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN: அவர்களுக்கே இந்தக் கேள்வியைப்போட்டால், நன்றாக பதில் சொல்லுவார்கள் என்று நினைக்கிறேன்.

Strike by taxi drivers

* 154 Q.—SRI A. A. RASHEED: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(a) whether the Baby Taxi Owners' Association have represented to the Government for adequate police protection during the recent taxi strike; and

(b) if so, the action taken thereon?

THE HON. SRI C. SUBRAMANIAM: (a) No, Sir.

(b) Does not arise.

SRI A. A. RASHEED: Is the Hon. Minister aware that during the recent strike, several owner-driven taxis were stoned and damaged, and if so, may I know what protection was given to owner-driven taxis?

THE HON. SRI C. SUBRAMANIAM: The question was with reference to request made by the Taxi Owners' Association. The answer was that there was no such request. A general assurance was given to all taxi owners that police protection would be given if sought for.

Chemical industries

* 155 Q.—SRI P. G. MANICKAM (on behalf of SRI A. VEDARATHNAM): கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) இம் மாநிலத்தில் ரசாயனத் தொழிற்சாலை ஏதேனும் ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

13th August 1960]

(ஆ) அப்படியானால், என்னென்ன ரசாயனத் தொழிற் சாலைகள், எங்கெங்கே ஏற்படுத்தப்படும்?

(இ) அவை ஒவ்வொன்றையும் நிறுவுவதற்கு செலவாகும் தொகை எவ்வளவு?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) There is no proposal to set up a chemical industry in the public sector.

(*b*) & (*c*) Do not arise.

SRI P. G. MANICKAM : *வேதாரண்யம் பிராந்தியத்தில் ஜிப்ஸம், சல்பேட், க்ளோரைட், காஸ்டிக் சோடா போன்ற தாதுப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன என்று ஒரு கம்பெனி ஆராய்ச்சி செய்து, சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதா? இதற்கு மூன்று கோடி ரூபாய் செலவாகும் என்றும், ஆண்டுதோறும் மூன்று கோடி பெருமானமுள்ள மேற்கண்ட தாதுப் பொருள்கள் கிடைக்குமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா? இதுபற்றி பரிசீலனை செய்யப்படுமா?*

THE HON SRI R. VENKATARAMAN : *அந்தக் கம்பெனியே இதைச் செய்தால் சர்க்கார் வரவேற்கும், உதவி கொடுக்கும்.*

'Kalnar' (asbestos) factory

* 157 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there is any proposal to start a 'Kalnar' (asbestos) factory in North Arcot district; and

(*b*) if so, when?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI V. K. KOTHANDARAMAN : *வட ஆற்காடு ஜில்லாவில் ஆம்பூருக்கு அருகிலுள்ள மலையில் கல்நார் உற்பத்தி செய்யக்கூடிய தாதுப் பொருள் இருப்பதாகச் சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறதா? அப்படியானால், அந்த இடத்தில் கல்நார் தொழிற் சாலையை ஏற்படுத்துவதற்கு சர்க்கார் முன்வருமா?*

THE HON. SRI R. VENKATARAMAN : *அந்தவிதமான தகவல் சர்க்காரிடம் இல்லை. டாக்டர் கிருஷ்ணன் அவர்கள் எழுதிய* " Geological Survey " *பிரகாரம் சேலம், நீலகிரி, கோயம்புத்தூர் போன்றவிடங்களில் இருப்பதாகத்தான் தகவல் இருக்கிறது.*

House-building Schemes

* 158 *Q.*—SRI P. G. MANICKAM : *கனம் கைத்தொழில் அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—*

வீடு கட்டும் திட்டங்களை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு ஸ்தாபனத்தின் கீழ் இயங்குவதற்கான திட்டம் எப்போதிலிருந்து அமுலுக்கு வரும்?